**போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் (கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவைகள்) செயற்திட்டம் - 2023**

---

போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் (கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவைகள்) செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 3425-SRI (SF) ஆம் இலக்க 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதிய தொழில்நுட்ப உதவி கடன் உடன்படிக்கையின் (விசேட செயற்பாடுகள்) 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும், விமான சேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். செயற்திட்டத்தின் குறிக்கோளானது முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் தயார்படுத்தலினை மேம்படுத்துவதாகும். கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிருவாக கையேட்டின் படி தேசிய துறைமுக முதன்மையான திட்டத்தினை பின்பற்றி துறைமுக வசதிகளின் அபிவிருத்திக்கான தயார்படுத்தலுக்கு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை ஆதரவளிக்கின்றது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 729.65 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 5 மில்லியனாகும். இதில் ரூபா 643.77 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 4.42 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. மிகுதித் தொகையான ரூபா 84.64 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதிளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி தொடங்கியுள்ளதுடன் 2021 மே 23 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்யும் திகதி 2023 மே 31 ஆந் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைமகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமிமை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் தொழில்நுட்ப உதவி கடன் உடன்படிக்கையின் உறுப்புரை IV இன் பிரிவு 4.01 (குறித்த உடன்பாடு) | கடன் உடப்படிக்கை மற்றும் செயற்திட்ட உடன்படிக்கைகளுக்கான பட்டோலை 05 இல் குறிப்பிட்ட அனைத்து கடப்பாடுகளையும் கடன் பெறுனர் நிறைவேற்ற வேண்டும் அல்லது நிறைவேற்றுவதற்கு காரணமாக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க 3425 ளுRI (SF) ஆம் இலக்க 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதிய கடனின் 05 ஆம் பட்டோலையின் அமுலாக்கல் ஒழுங்குபடுத்தலின் படி கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அதன் விபரமான பொறியியல் செயற்பாடுகளுக்கான சாத்தியவள ஆய்வுகளுக்கான ஆலோசனை சேவைகளை 2020 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டளவில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் பெறுகைச் செயன்முறையின் தாமதத்தின் காரணமாக 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க கொழும்பு வடக்கு அபிவிருத்தி | உடன்பட்டுக்கொள்ளப்பட்டது. | பொறுப்புக்களை நிர்ணயித்து செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கான விரிவான திட்டம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இறுதியான EIA அறிக்கையினை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தமானது 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி GBP 0.85 மில்லியன் எஸ் டொலர் 2.03 மில்லியன் மற்றும் 66.17 மில்லியன் தொகையான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட யு.எஸ் டொலர் 2.03 மில்லியன் மற்றும் பேரம் பேசப்பட்ட ஒப்பந்த விலைக்கு வரையறுத்த AECOM உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றாடல் UK நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் இது அத்திகதியிலிருந்து 15 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். எனினும் ஒப்பந்தமானது பட்டியல்படுத்தப்பட்டவாறு 2021 மே 23 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் 2023 மே 31 ஆந் திகதி வரைக்கும் கால நீடிப்பு வழங்கப்பட்டது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆலோசனை உடன்படிக்கையின் பிரகாரம் அறிக்கையிடல் வேண்டுதல்களின் அட்டவணை 02 தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வழங்கப்பட்ட அட்டவணைகளுக்கு இணங்க செயன்முன்னேற்ற கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இறுதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது பொதுமக்களின் விசாரணைக்காக கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனினும் | ஆலோசனையாளர் ஆய்வுகளைப் பூர்த்திசெய்து இறுதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) மற்றும் சாத்தியவள ஆய்வு (FS) அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தார். TOR இலுள்ள வேண்டுதல்களின் படி சாத்தியவள ஆய்வு அறிக்கையானது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு (ADB) அவர்களின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பிவைக்கப்பட்டது.<br><br>களணி ஆறானது இந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வின் அதிக எதிர்விளைவுள்ள பகுதிகளில் ஒன்றாக உள்ளதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பிரபல்யமான உறுப்பினரான | இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அறிக்கையிடல் வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |

பொதுமக்கள் விசாரணை அறிக்கையானது 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

நீர்பாசனத் திணைக்களமானது இந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வின் பெறுபேறுகள் தொடர்பாக மீளாய்வினை மேற்கொண்டு கருத்துரைகளை அனுப்பிவைப்பதற்கு நீண்டகாலம் எடுத்திருந்தது. ஆலோசனையாளர் சமூகமளித்தலோடு இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையும் நீர்ப்பாசனத் திணைக்களமும் பல விசேட கூட்டங்களை நடாத்தியிருந்தது. அதில் இந்த ஆய்வினை மீளாய்வு செய்வதற்காக அவர்களுடன் உரிய வடிவமைப்பு விபரங்களும் கலந்துரையாடப்பட்டன. இதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுத்திருந்தது.

சில கடப்பாடுகளுடன் நீர்பாசனத் திணைக்களத்திடமிருந்து கருத்துரைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையானது அந்த கருத்துரைகளை இறுதி சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கு இணைத்துக்கொண்டுள்ளதுடன் TOR இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி பொதுமக்கள் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

அதற்கிணங்க CC&CRMD ஆனது பொதுமக்கள் விசாரணையினை 30 வேலைசெய்யும் நாட்கள் காலப்பகுதிக்காக 2023-12-28 ஆந் திகதி தொடங்கியிருந்தது. இந்த பொதுமக்களின் விசாரணை செயன்முறையானது 2024 பெப்ரவரியில் முடிவடைந்திருந்தது. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு CC&CRMD இனூடாக இறுதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கான பொதுமக்களின் கருத்துரைகள் அல்லது அவதானிப்புக்களை (ஏதாவது இருப்பின்) பெற்றுக்கொண்டதன் பின்னரேயே அறிக்கையினை முடிவுறுத்த முடியும்.

### 3.2 சுற்றாடல் விடயங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது சுற்றாடல் மற்றும் சமூகம் மீதான சாத்தியமான சுற்றாடல் தாக்கம் அடயாளங் காணப்பட்டது. அதற்கிணங்க பாதகமாக தாக்கம் ஏற்படுத்தக்கூடிய காரணிகளைப் பற்றி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) **அலை நிலைமைகள்**<br><br>வலயம் 2 மற்றும் 4 - துறைமுக நுழைவுகள் மற்றும் களனி ஆற்று வாயில்களில் பௌதீக கட்டமைப்புக்களின் (அதாவது அவதானிப்புக்கள் மற்றும் ஆற்று தடுப்புச் சுவர்) தோற்றத்தின் காரணமாக அலை நிலைமைகளில் மாற்றங்கள்<br><br>(ii) **கடற்கரையோர உருவ அமைப்பு**<br><br>துறைமுகத்திலிருந்து களணி ஆற்று உட்புகு வழி மற்றும் பாதுகாக்கப்பட்ட கடற்கரையோர (0.4.2Km ஆற்று உட்புகு வழியின் வடக்கு பக்கம்) - கடற்கரை சார்ந்த கலன்கள் 2, 3 மற்றும் 4ஏ இல் கட்டமைப்புக்கள் (அதாவது அலைதாங்கி மற்றும் ஆற்று தடுப்புச் சுவர்) காணப்படுவதன் காரணமாக கடற்கரையோரத்திற்கு அருகாமையிலுள்ள உருவ அமைப்புக்கில் மாற்றங்கள்.<br><br>களணி ஆற்று உட்புகுவழி மற்றும் துறைமுகத்தின் வடக்கு பக்கம் - வலயங்கள் 4 மற்றும் 5 இல் கட்டமைப்புக்கள் (அதாவது அலை தாங்கியி மற்றும் ஆற்று தடுப்பு சுவர்கள்) காணப்படுவதன் காரணமாக கடற்கரையோர உருவ அமைப்புக்களில் மாற்றங்கள் | ஒரு சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ திட்டம் (ESMP) வடிவமைக்கப்பட்டது. இது உத்தேச CNP அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ திட்ட வடிவமைப்பின் பொதுவான வேண்டுதல்களை வரையறுக்கின்றது.<br><br>ESMP இன் முக்கிய அம்சங்களானது மாற்றல் முகாமைத்துவத்தின் வகி பாகங்களும் பொறுப்புக்களும், பயிற்சி, கண்காணிப்பு, அறிக்கையிடல் என்பவற்றை கருத்தில் கொள்வதுடன் இந்த வகையான சாத்தியமான சுற்றாடல் மற்றும் சமூக தாக்கங்களுக்கான இணைந்த தணித்தல் நடவடிக்கைகளை வழங்குகின்றது. இது ESIA இன் செயல்முறைமையினூடாக அடையாளங்காணப்பட்டது.<br>செயற்திட்டத்தின் இயக்குனராக இலங்கை துறைமுக சுகாதார சபையானது (SLPA) செயற்திட்ட கடப்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன மற்றும் பிரயோகிக்ககூடிய சுற்றாடல் மற்றும் சமூக சட்ட ஒழுங்குபடுத்துதல் மற்றும் கூட்டிணைந்த வேண்டுதல்களுடன் இணங்கியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. | சுற்றாடல் ஆபத்தினை குறைப்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**4. வளங்களின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வருடாந்த பாதீட்டினூடாக மீளாய்வாண்டிற்கான இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) செலவுகளின் கீழ் செயற்திட்ட செலவுகளுக்காக ரூபா 824 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 552 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறாகும். | அறிக்கைகளைப் பெற்றுக்கொண்தன் பின்னர் செயல்முன்னேற்ற கொடுப்பனவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>இறுதியான EIA அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இறுதிக் கொடுப்பனவுகள் விடுவிக்கப்படும். | செயற்திட்ட நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் உள்ளபடியாக அடைந்து கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | **ஆண்டிற்கான நிதி ஏற்பாடு** | **ஆண்டிற்கான உள்ளபடியான செலவுகள்** | **சேமிப்பு** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கடன் | 737,178,000 | 506,136,839 | 231,041,161 |
| இலங்கை அரசாங்கம் (GOSL) | 86,461,360 | 46,331,709 | 40,129,651 |
| மொத்தம் | 823,639,360 | 552,468,548 | 271,170,812 |